## மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் அறிவிப்பு!

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் (28.05.2026 - வியாழக்கிழமை) காலை 10 மணியளவில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம், வல்லூரில் மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் அப்தூல் மாலிக், பிரபு கஜேந்திரன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன் பாபு, டி.சங்கர், சே.யுவராஜ், இ.ரா.கதிரவன், ஜெ.பிரதாப், ஆர்.தில்லைகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1.ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா

2. கழக ஆக்கப் பணிகள்

**கே.வி.லோகேஷ்**
மாவட்ட அமைப்பாளர்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி

## மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் க.பா.பிரதீப்குமார் வேண்டுகோள்!

சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (27.05.2026 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, பிரிக்ளின் சாலையில் உள்ள எஸ்.ஆர். பேலஸில் நடைபெறும் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குகிறார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்டத் துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், பகுதி ஒருங்கிணைப்பாளர்கள், வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.பா.பிரதீப்குமார்**
அமைப்பாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி




## மாதவரம் வடக்குப் பகுதி முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியோடு கொண்டாடி மகிழ்வோம்!

### புழல் எம். நாராயணன் தலைமையில் தீர்மானம்!

சென்னை, மே 27-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல் வீரர்கள் கூட்டம் 16வது வட்டம் மணலி புதுநகர் புனித அந்தோணியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு, 23 அ வட்ட செயலாளர் வி.ஆர். குப்பன், 19-வது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 17-வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன்,பகுதி பொருளாளர் ஆர். முரளி, மாவட்ட பிரதிநிதிகள் பா. சந்திரன், ஜிம் கே.ராஜா, வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எஸ். கருணாகரன்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபால கிருஷ்ணன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் முகமது வசீம், இலக்கிய அணி துணை அமைப்பாளர் தங்கராஜ், மாவட்ட அயலக துணை அமைப்பாளர் எச்.பீர் முகமது, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் இ. எம். மனோகரன்ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

1) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை ஜுன் 3 அன்று மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, புத்தெழுச்சி நாளாக வார்டுகள் தோறும், பாகங்கள் தோறும் சிறப்பாக கொண்டாடி நலத்திட்ட உதவிகள் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2)திராவிட மாடல் அரசால் நிறைவேற்றப்பட்ட புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், மற்றும் மகளிர் கலைஞர் உரிமைத்தொகை ரூபாய் 1000 தொடர்ந்து வழங்க ஆளுகின்ற அரசை வலியுறுத்தி பெற்றுத் தந்த கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற 15 நாட்களில் சுமார் 264 குற்றங்கள் நடைபெற்றுள்ள சூழ்நிலையில், சட்டம் ஒழுங்கை சரிவர பராமரிக்காத, குதிரை பேர அரசை வன்மையாக கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) அமைச்சர் ஆதாவ் அர்ஜுனா அவர்கள் திமுகவின் தோல்விக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் சபரீசன் தான் காரணம் என்று தவறான கருத்துக்களை பதிவிடுவதை மாதவரம் வடக்கு பகுதி திமுக வன்மையாக கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இத்தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சிறப்பாக பணியாற்றிய கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,PEN நிறுவனத்தை சிறப்பாக கையாண்ட திரு. சபரீசன் அவர்களுக்கும் நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டது.

4 ) விளாத்திகுளத்தில் பெண்ணை கற்பழித்து கொலை செய்த குற்றவாளியை உடனடியாக கைது செய்து நீதி மன்றத்தில் விரைவாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து இரட்டை மரண தண்டனை பெற்றுத்தர 77 நாட்களில் தீவிரமாக செயலாற்றிய திராவிட மாடல் அரசின் தலைவரும், முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி திமுக நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

இக்கூட்டத்தில் அணிகளின் நிர்வாகிகள் மகளிர் அணி புஷ்பராஜ், மதி, பெரிய நாயகி, கஸ்தூரி, ராஜேஸ்வரி, சகிலா, பார்கவி, ஏ.விஜயன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், எம் .என் அஜய் தென்னவன், வி.சிவப்பிரகாஷ் பகுதி மாணவர் அணி அமைப்பாளர் விக்னேஸ்வரன்,

15 வது வட்ட நிர்வாகிகள் ஆர். ராஜேந்திரன், எல்லமுத்து, ஏ. பக்தவச்சலம், பி.டி. ரவிச்சந்திரன், சி. பாலன், வழக்கறிஞர்கள் சி. டில்லிபாபு, ஆர் சண்முகம்,பர்மா நகர் சுரேந்தர், 17வது வட்டம் எம். என். தளபதி, ஏ. தசரதன், இ. சீனிவாசன், கதிர்வேல், ஆர். பிரபு, பி. ரமேஷ், பரணி, ரஞ்சித், ஜே. லோகநாதன்

16 வது வட்டம் இ. குமரவேல், கே. எ. ரமேஷ், சி. முத்தையா, என். பரசுராமன், என். மகேஷ் குமார்,ஜி. நித்யா, செமின் எடிசன், செபின் எடிசன், ஹேமந்த் குமார், மணிகண்டன், ஆர். விஜய், ஜே. பபின், எம்.பரணி குமார், ஜி. நாகலிங்கம், விக்னேஷ், வி.வினோத், ரூப்குமார், மதி, பர்மா நகர் தினேஷ் சங்கர், சரவணன், மகாலட்சுமி

17 வது வட்ட நிர்வாகிகள் எஸ். பாலாஜி, டி.திவாகர், எம். ஜான்சன்,

19வது வட்டம் சையத் அப்சல்,சாய் சந்திப்,

23வது வட்டம் பாக முகவர் ஜெ.ராஜா, விமல் ராஜ், 23 அ வட்டம் வி. ஹரி, வி. ஆர். கே. ஜவகர் உள்ளிட்ட கழகத்தினர் நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.

இறுதியாக மாவட்ட பிரதிநிதி பா. சந்திரன் நன்றி கூறினார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி நங்கநல்லூர் கே.சி.டி மஹாலில் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன் தலைமையில், நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தா.மோ.அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ். பாரதி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் இ. கருணாநிதி, எம். எஸ்.கே. இப்ராஹிம், கோல்டு பிரகாஷ், சுந்தர்ராஜன், பாபு, ரமேஷ், சாலமோன், துர்கா தேவி நடராஜன், வட்ட கழக செயலாளர்கள் நடராஜன், உலகநாதன், ஜேசுதாஸ், ஜெகதீஸ்வரன், வேலவன், சரவணா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக செயல் வீரர்கள் கூட்டம் 16வது வட்டம் மணலி புதுநகரில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்றது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை வார்டுகள், பாகங்கள் தோறும் எழுச்சியாக கொண்டாடி மகிழ்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வட்டச் செயலாளர்கள் வி. ஆர். குப்பன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், கே.கருணாகரன், நிர்வாகிகள் ஆ. ராஜேந்திரன், ஆர். முரளி, பா.சந்திரன், கே.ராஜா,ஆர்.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மணியன்

### மே 27 (2009)



கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.

கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.

தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.

இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ‘கலைஞர் விருது’ வழங்கிசிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பெருநகர சென்னை மாநகராட்சி

# தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம்!

### எ.நாகராஜன் அறிவிப்பு !

சென்னை, மே 27-

பெருநகர சென்னை மாநகராட்சி, தி.மு.க. மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைக் கூட்டம், வருகின்ற 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் ரிப்பன் கட்டடம் 2வது மாடியில் உள்ள ஆலோசனை கூடத்தில், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா அவர்களும் மற்றும் துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றயுள்ளார்கள்.

எனவே, மாமன்ற தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு மாநகராட்சி ஆளும் கட்சி கொறடா எ.நாகராஜன் தெரிவித்துள்ளார்.

## மயிலை மேற்குப் பகுதி

# 122வது வட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிவிப்பு!

சென்னை, மே 27-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி 122- வது வட்ட திமுக ஆலோசனை கூட்டம் இன்று 27.5.2026 புதன்கிழமை மாலை 7.00 மணியளவில் ஆழ்வார்பேட்டை தெருவில் உள்ள வட்ட செயலாளர் அலுவலகத்தில் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி ஜுன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை புத்தெழுச்சி ஊட்டக் கூடிய நாளாக கொண்டாடுவது குறித்து தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. ஆலோசனை படி, வட்ட அவைத் தலைவர் இ கே மதி அவர்கள் தலைமையில் வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் எனது முன்னிலையில் நடைபெறுகிறது.


இக்கூட்டத்தில் நமது வட்டக் கழகத்தைச் சார்ந்த மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள்(BLA-2), பாக உறுப்பினர்கள்(BLC), பாக இளைஞர் அணி வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி 122 வது வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இராயபுரம் சி. நவமணி

### மே 27 (2012)



இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**